Previous Date of examination : **10.02.2026**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
TIRUVARUR.

**STC. No.1204/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | **PW 1 (LW 2 )** | Caste | : | |
| Name | : | திரு. ஜானி ரஞ்சித் | Age | : | 37 /2026 |
| Father's Name | : | ஜான் ஜேசுகனி | Occupation | : | முதல் நிலை காவலர் |
| Village | : | கீழ சிவல்பட்டி | Taluk | : | திருப்பத்துார் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **10th day of February 2026.**

**( A1present. A2 Absent. Petition u/s.355 BNSS filed and allowed)**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம், திருப்பத்துார் உட்கோட்டம், கீழசிவல்பட்டி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் திருவாரூர் நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றிய போது கடந்த 13.07.2024 ந் தேதி மதியம் 13.00 மணியளவில் பணியிலிருந்தபோது நானும் என்னுடன் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திருநாவுக்கரசு மற்றும் தலைமை காவலர் ஞானசேகரன் அவர்கள் முன்னிலையில் அவருக்கு கிடைத்த ரகசிய தகவலை பெற்று காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து பின்னர் உதவி ஆய்வாளர் திருநாவுக்கரசு ஆகியோருடன் நிலைய எல்லைக்குட்பட்ட திருவாரூர் மருதப்பட்டிணம் மெயின்ரோட்டில் கண்காணித்து வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்றுக் கொண்டிருந்த 2 நபர்கள் எங்களை கண்டதும் ஓட முயன்றவர்களை பிடித்து விசாரிக்க தங்களது பெயர் சுபாஷ், த/பெ. பரமசிவம், சந்துரு, த/பெ. சந்தானம் என்று கூறினார்கள். அவர்களில் ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அவர்களை சோதனை செய்ய அனுமதி கோரிய போது அவர்கள் எங்களை சோதனை இடலாம் என்று சம்மத கொடுத்தார்கள்.

2. அவர்களை சோதனை செய்த போது எதிரி சுபாஷின் சட்டை பையில் கஞ்சா பொட்டலம் இருந்தது. அவரை விசாரிக்க கஞ்சா போதை பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக கூறினார்கள். அவர்கள் அந்த கஞ்சாவை வைத்திருக்க எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை. மேற்படி எதிரிகளை உதவி ஆய்வாளர் 13.30 மணியளவில் குற்றக்காரணம் கூறி இருவரையும் கைது செய்தும், எதிரி சுபாஷ் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் 13.40 மணிக்கு பதிவு செய்துக்கொண்டு, அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகளான நானும், தலைமை காவலர் ஞானசேகரன் அவர்களும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். எதிரி வைத்திருந்த கஞ்சா பொட்டலத்தை வாங்கி பார்த்தபோது 100 கிராம் கஞ்சா இருந்தது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 01 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

3. பின்னர் 14.30 மணியளவில் எதிரி வசமிருந்த 100 கிராம் கஞ்சா உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றினார். அதிலும் நானும், தலைமை காவலர் ஞானசேகரன் என்பரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.02 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) அதிலிருந்து தலா 50 கிராம் கஞ்சாவை இரண்டு காக்கி கவரில் ஆய்வாளர் தனியாக எடுத்து இரசாயன பரிசோதனைக்கு அனுப்புவதற்காக எடுத்து வைத்திருந்தார். பின்பு, எதிரிகளுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.257/2024 சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act. ன் கீழ் 13.07.2024 ம் தேதி 13.00 மணிக்கு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்வதற்கு நானும், தலைமை காவலர் ஞானசேகரன் என்பவரும் உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் விசாரிக்க நடந்த விபரத்தைச் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

சம்பவம் இடமாக சொல்லப்படும் மருதப்பட்டினம் மெயின்ரோட்டின் அருகே குடியிருப்புகள் அதிக நெருக்கமாக இருக்கும் பகுதி என்றால் சரிதான். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் உதவி ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எவ்வித கஞ்சாவையும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் புள்ளிவிபர கணக்கிற்காக உதவி ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்ததில் எனது உயர் அதிகாரி சொன்னதன் காரணமாக அதில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. வெள்ளை நிற பாலீதின் பை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கானது புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.**

**ஒம்/- G. லிசி.,**
**நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**